# தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 620 023.

## தேர்வு நெறியாளர் அலுவலகம் - சுற்றறிக்கை

நாள் 03.08.2026

இக்கல்லூரியில் UG - **2023-26**ஆம் கல்வியாண்டில் பட்டப் படிப்பை முடித்த(ஏப்ரல் 2026 பருவத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள்) மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் தற்காலிகச் சான்றிதழ்(Provisinal Certificate) பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்டு துறைகளுக்கு வழங்கப்படுகிறது. மாணவர்கள் தங்களது துறைக்குச் சென்று இத்தற்காலிகச் சான்றிதழினை, பெயர் பட்டியலில் உள்ள விவரங்களை சரிபார்த்து கையொப்பமிட்டு பெற்றுச் செல்ல அறிவுறுத்துமாறு துறைத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாணவர்களுக்கு வழங்கப்படாத மீதம் உள்ள தற்காலிகச் சான்றிதழ்கள் மற்றும் மாணவர்கள் கையொப்பமிட்ட பெயர் பட்டியலினையும் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் **17.08.2026** அன்று மீள சமர்ப்பிக்குமாறு துறைத்தலைவர்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பட்டம் பெற விரும்பும் மாணவ மாணவியர், இக்கல்லூரியின் தேர்வு நெறியாளர் அலுவலகம் மூலம் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான கட்டண விவரம் மற்றும் விண்ணப்பத்தினை பாரதிதாசன் பல்கலைக் கழக இணைய தளத்திலிருந்து (www.bdu.ac.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். கல்லூரியின் தேர்வு நெறியாளர் அலுவலகத்திலிருந்து செலுத்துச் சீட்டினை (Challan) பெற்று கே.கே. நகர் கனரா வங்கிக் கிளையில் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டமளிப்புக் கட்டணத்தை செலுத்த வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் பட்டமளிப்புக் கட்டணம் செலுத்தப்பட்டதற்கான செலுத்துச் சீட்டுடன் இணைத்து கல்லூரியின் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க அறிவுறுத்துமாறு துறைத்தலைவர்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் போது தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் உள்ள புகைப்படப் பட்டியலில் மாணவர்கள் தங்களது புகைப்படத்தை ஒட்ட வேண்டும்,

பட்டமளிப்பு விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் **31.08.2026**

விண்ணப்பத்தோடு இணைக்கப்பட வேண்டியவை: **UG&PG பட்டங்களுக்கு**

1. Fees Receipt(Challan)
2. Attested Xerox copy of Provisional Certificate
3. Attested Xerox copy of Consolidated Mark Statement
4. One photo (size 3.5cm x 4.5cm ) - புகைப்படத்தினை விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும்.
5. One photo (size 3.5cm x 4.5cm ) - புகைப்படத்தின் பின்பக்கம் பெயர், பதிவு எண் மற்றும் centre code ஆகியவற்றை எழுதி விண்ணப்பத்துடன் இணைக்கவும்.

6. One photo (size 3.5cm x 4.5cm ) –அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படத்தை தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் உள்ள புகைப்பட பட்டியலில் தங்களது பதிவுஎண் மற்றும் பெயருக்கு மேலே ஒட்ட வேண்டும்.
7. Xerox copy of Transfer Certificate (TC)
8. முதுநிலை(PG) பட்டச்சான்றிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்களது இளநிலை(UG) பட்டச்சான்றின் நகலினை இணைக்க வேண்டும்.
9. Xerox copy of Aadhaar Card.

(Tatkal(தட்கல்) முறையில் விண்ணப்பிப்பவர்கள் நேரடியாக பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் விண்ணப்பிக்கவும்)

**மாணவர்களின் கவனத்திற்கு :**

மாணவர்கள் கட்டாயமாக விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ள புகைப்படத்தினை மட்டுமே புகைப்பட பட்டியலில் ஒட்ட வேண்டும். மேலும் ஒட்டப்படும் புகைப்படம், Selfi புகைப்படமாகவோ, Uniform உடை அணிந்துள்ள புகைப்படமாகவே, Group புகைப்படமாகவோ இருக்க கூடாது. மீறி மேற்கண்டபடி புகைப்படங்கள் ஒட்டப்பட்டால் அம்மாணவர்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கலாகிறது.

'Expansion of initials in English' எனும் இடத்தில் அப்பாவின் பெயர் ஆங்கிலத்தில் எழுதவும்

'Expansion of initials in Tamil' எனும் இடத்தில் அப்பாவின் பெயர் தமிழில் எழுதவும்.

Centre Code : | 0 | 3 | 0 |

தேர்வு நெறியாளர்.
CONTROLLER OF EXAMINATIONS
Thanthai Periyar Government
Arts & Science College (Autonomous)
Tiruchirappalli - 620 023

க. அம்பிகம்மாள் 04/08/26
முதல்வர்
PRINCIPAL
Thanthai Periyar Government
Arts & Science College (Autonomous)
Tiruchirappalli - 620 023
D.O.CODE Cl. 102

பெறுநர்:
சார்ந்த துறைத்தலைவர்கள்.

இணைப்பு:

மாணவர்களது பெயர் பட்டியல்